இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 24 ISSUE 4 APRIL-2024

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



## மூன்று நாளில் நடப்பது என்ன?

இயேசுவை தினம் பார்க்கிறேன் ஏப்ரல் 2024 மாதப் பத்திரிக்கை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

## செம்பட்டியில்

# இயேசுவின் பாதத்தில்

# ஆசீர்வாத உபவாச ஜெபம்

**ஏப்ரல் 12**

இரண்டாவது வெள்ளிக்கிழமை
காலை 9.30 மணி
முதல் 2.30 மணி
வரை



**ஏப்ரல் 13**

இரண்டாவது சனிக்கிழமை
காலை 9.30 மணி
முதல் 2.30 மணி
வரை

தேவ செய்தியாளர்கள்
சகோதரர். **எல். வின்சென்ட்ராஜ்**
சகோதரி. **கலா வின்சென்ட்ராஜ்**

**இடம் : வானத்தின் வாசல், எழுப்புதல் ஜெப மையம், செம்பட்டி, திண்டுக்கல்**

---

மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்

# மதுரையில் எழுப்புதல்

# உபவாச ஜெபம்



**ஏப்ரல் 20**

மூன்றாவது சனிக்கிழமை
காலை 9.30 - 2.30 மணி



தேவ செய்தியாளர்கள்
சகோதரர். **L. வின்சென்ட்ராஜ்**
சகோதரி. **கலா வின்சென்ட்ராஜ்**

**இடம் : இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம், பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், PRC Depot அருகில், மதுரை.**

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். **சங் 138:8-ல் கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்** என்ற வார்த்தையின்படி தேவன் நமக்காக யாவையும் செய்து முடிப்பார். கடந்த பிப்ரவரி மாதம் 17-ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற எழுப்புதல் உபவாச ஜெபத்தை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். திரளான ஜனங்களை தேவன் கூட்டிச் சேர்த்தார். அண்ணன் மோகன் சி. லாசரஸ் அவர்களை தேவன் வல்லமையாக எடுத்துப் பயன்படுத்தினார். உபவாச ஜெபத்திற்கு வந்திருந்த ஜனங்கள் தாங்களாகவே ஜெபித்து விடுதலையை, சுகத்தைப் பெற்றார்கள். இந்த கூட்டத்திற்காக ஜெபித்த உங்களுக்கு நன்றி. இந்த மாத இதழ் உங்கள் கரங்களில் இருக்கும் போது நாங்கள் சுவிசேஷ பயிற்சி முகாமில் ஈடுபட்டிருப்போம். ஏப்ரல் 9-12ஆம் தேதி வரை ஏறக்குறைய 300 பேருக்கு சிறப்பு சுவிசேஷ பயிற்சி கொடுக்க இருக்கிறோம். கர்த்தர் ஒரு சுவிசேஷ சந்ததியை எழுப்பவும், நலிவுற்ற, ஒதுக்கப்பட்ட சுவிசேஷகர்களை தேவன் கட்டியெழுப்பவும், சுவிசேஷம் அறிவிக்கிற பணியை பூமி முழுவதும் செய்ய கருத்தாய் ஜெபியுங்கள். ஒவ்வொரு மாதமும் வானத்தின் வாசலில் நடைபெறும் உபவாச ஜெபங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்கவும், அந்த இடம் சுவிசேஷ பயிற்சி மையமாக மாறவும் தொடர்ந்து ஜெபியுங்கள். நமது இயேசு வாழ்கிறார் யூடியுப் சேனலில் ஒவ்வொரு நாளும் இரவில் **கர்த்தாவே என்னை கைதூக்கி விடும்** நிகழ்ச்சியும், காலையில் **இயேசுவை தினம் பார்ப்போம்** நிகழ்ச்சியும் மிகுந்த ஆசீர்வாதமாக ஒளிபரப்பாக தேவன் கிருபை செய்கிறார். மீடியா ஊழியங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். நடைபெறப் போகிற நாடாளுமன்ற தேர்தலுக்காக நாம் கட்டாயம் ஜெபிக்க வேண்டும். கர்த்தருக்குப் பயந்து, அவருடைய ராஜ்ஜியத்திற்கு உறுதுணையாக இருக்கிற கோரேஸ் ராஜாக்களை கர்த்தர் எழுப்பித்தர வேண்டும். தொடர்ந்து உங்கள் ஜெபத்தாலும், காணிக்கையினாலும் இந்த ஊழியத்தைத் தாங்க, முன்வர உங்களை அன்புடன் அழைக்கிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



*இயேசுவின் பணியில்,*

L. Vincentraj

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)



# மூன்று நாளில் நடப்பது என்ன?

சகோ. L. வின்சென்ட்ராஜ்

**மூன்று நாளைக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி உன்னை மறுபடியும் உன் நிலையில் உயர்த்துவார். ஆதி 40:13**

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வேதாகமத்தில் நாட்கள், எண்கள் இவைகளைப் பற்றியும், சில முக்கிய நாட்களைப் பற்றிப் பார்க்கிறோம். நாற்பது நாட்கள், ஏழு நாட்கள், மூன்று நாட்கள் என்று சொல்லப்பட்டுள்ளது, அதிலே இந்த மூன்று நாட்களைப் பற்றித் தான் இப்பொழுது நாம் பார்க்கப் போகிறோம். நம்முடைய தேவன் திரித்துவ தேவனாய் இருக்கிறார். எங்கும் நிறைந்தவர், எல்லாம் வல்லவர். அவர் பிதாவாகவும், குமாரனாகவும், பரிசுத்த ஆவியானவராகவும் இருக்கிறார். **மத் 28:19-ல் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற தம்முடைய நாமத்தை அங்கே சொல்லுகிறார். மேலும் 1 யோவான் 5:7-லும் பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர் பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்றார்.** அப்படி திரித்துவ தேவனாயிருக்கிறவர் இன்றைக்கு நமக்குள் இருக்கின்ற ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று அமைப்பின் மூலமாக செயல்படுகிறார். இந்த மூன்று என்பது முக்கியமானது. இயேசு செய்த முதல் அற்புதம் யோவான் 2:1-ல் நடந்த கல்யாணம். அதில் செய்த அற்புதம் தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றினார். அதுமட்டுமல்ல இயேசு சொன்னார் **மத் 16:21-ல் மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்றார்.** இதுதான் நான் இந்த பூமிக்குக் கொடுக்கும் அடையாளம் என்றார். வேதபாரகர்கள், பரிசேயர்கள் நீர் யார்? எங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காட்டு என்ற போது இயேசு சொன்னார் **மத் 12:40-ல் யோனா இரவும் பகலும் மூன்று நாள், ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல, மனுஷகுமாரனும் இரவும், பகலும் மூன்று நாள் பூமியின் வயிற்றில், பூமியின் இருதயத்தில் இருப்பார் என்றார்.** இப்படி பல சம்பவங்கள் இந்த மூன்று நாளிலே நடந்ததைப் பற்றி வேதம் சொல்லுகிறது. இதைப் போல பல சம்பவங்களைப் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பார்க்கிறோம். இப்படி மூன்று நாட்களில் நடந்த அற்புதங்களை, நன்மைகளைத்தான் நாம் பார்க்கப் போகிறோம்.

யோசேப்பு சிறையில் இருக்கும் போது பார்வோனுடைய அரண்மனையிலே இருந்த இரண்டு பேர் ராஜாவின் கோபத்திற்கு உள்ளாகி, யோசேப்பு இருந்த சிறைச்சாலையிலே தள்ளப்பட்டார்கள். யோசேப்புக்கு சிறைச்சாலை என்பது தேவன் உலாவுகிற இடமாகவும், தங்கும் இடமாவும் இருந்தது. இந்த சிறைச்சாலையே யோசேப்புக்கு ஒரு பரலோகமாக மாறியது. காரணம் கர்த்தர் அவனோடே இருந்தார்.

அதனால் அந்த இக்கட்டில், உபத்திரவங்களில் மகிழ்ச்சியாய், சந்தோஷமாய் இருந்தான். அப்பொழுது ஒரு நாள் காலையில் ராஜாவின் கோபத்திற்கு உள்ளாகி, சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட அந்த இரண்டு பேரும் சோர்வோடும், கலக்கத்தோடும் அமர்ந்திருந்தார்கள். அவர்களைக் கண்ட யோசேப்பு நீங்கள் துக்க முகத்தோடு, கவலையோடு இருக்க காரணம் என்ன? என்ன நடந்தது? என்ன சம்பவித்தது? என்றான். அப்பொழுது தான் அவர்கள் கண்ட கனவை, சொப்பனத்தை யோசேப்புக்கு விவரித்தார்கள். அந்த சொப்பனத்துக்கு, கனவுக்கு யோசேப்பு சொன்ன அர்த்தம், இந்த மூன்று கூடையும், மூன்று நாட்கள். இன்னும் மூன்று நாட்களுக்குள்ளே பார்வோன் உன் தலையை உயர்த்தி, மீண்டும் அவருடைய ராஜ்ஜியத்தில் உன்னை உயர்த்துவார் என்றார். யோசேப்பு சொன்னபடியே பார்வோன் ஒருவனை விடுதலையாக்கி, மூன்று நாளைக்குள் அவர் தலையை உயர்த்தி, அவர் சமூகத்தில் நிற்க வைத்தார். மூன்று நாளைக்குள் தேவன் சூழ்நிலைகள், வேதனைகள், அவமானங்கள் அத்தனையையும் மாற்றி அவனுக்கு ஒரு அற்புதத்தைச் செய்தவர் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியேஉங்களுக்கும் தேவன் கட்டாயம் ஒரு அற்புதத்தைச் செய்வார், செய்ய முடியும், தோல்வியை மாற்ற முடியும், நிந்தையை மாற்ற முடியும், அவமானத்தை மாற்ற முடியும். ஆம் மூன்றுநாளைக்குள் பார்வோன் உன் தலையை உயர்த்தி மேன்மைப்படுத்துவார் என்று யோசேப்பு சொன்ன மங்கள வார்த்தையை நிறைவேற்றினார்.

இன்றைக்கும் உயிரோடு இருக்கிற தேவன், உங்களுக்கு நீங்கள் எதிர்பார்க்கின்ற காரியங்களில் ஏதாவது ஒரு அற்புதத்தைச் செய்வார். தேவனுக்கு அதிகபடியாய் மூன்று நாட்கள் போதும். தமிழில் ஒரு பழமொழி சொல்வார்கள் விருந்தும், மருந்தும் மூன்று நாட்கள் என்பார்கள். டாக்டர் மருந்து எழுதும் போது மூன்று நாட்கள் தான் எழுதுவார். உங்கள் வாழ்க்கையை சரி செய்ய, உங்கள் போராட்டத்திற்கு ஒரு முடிவு கட்ட மூன்று நாட்கள் போதும். அதைத்தான் யோசேப்பு தீர்க்கதரிசனமாக மூன்று நாளில் நீ தப்புவிக்கப்படுவாய், மூன்று நாளில் உன் தலை உயர்த்தப்படும் என்றார். இந்த செய்தியை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே உங்கள் போராட்டம் என்ன? உங்கள் பிரச்சனை என்ன? நெடுநாட்கள் தாமதிக்கிறது, நீண்ட நாட்கள் பிரச்சனையாக இருக்கிறது கோர்ட் கேஸ், இந்த வியாதி போராட்டம், சொத்துப் பாகப்பிரிவினை முடிந்தபடியில்லை, இனி அதன்மேல் எனக்கு நம்பிக்கை இல்லை என்று சோர்ந்து போனீர்களா? அவ்வளவுதான் என் வாழ்க்கையில் எல்லாம் முடிந்தது என்று நினைக்கின்றீர்களா? நீங்கள் தேவன் மேல் வைத்த உங்கள் நம்பிக்கை வீண் போகாது, உங்கள் பிரயாசம் வீண் போகாது. மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்த தேவன் இன்றைக்கு உங்களுக்கு ஒரு அற்புதம் செய்வார். உங்கள் போராட்டத்திற்கும், பிரச்சனைக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைப்பார். மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்றவர் கட்டாயம் உங்கள் காரியங்களில் ஒரு அற்புதத்தைச் செய்வார். **ஓசியா 6:2-ல் தீர்க்கதரிசி சொல்லுகிறார் இரண்டு நாட்களுக்குப் பின் அவர் நம்மை உயிர்ப்பிப்பார், மூன்றாம் நாளில் நம்மை எழுப்புவார். அப்பொழுது நாம் அவருடைய சமூகத்தில் பிழைத்திருப்போம் என்றார்.**

நீங்கள் பிழைத்திருக்கும்படி, வாழ்ந்திருக்கும்படி, உங்களுடைய இந்த சூழ்நிலை மாறும்படி மூன்றே நாளில் அற்புதம் செய்கிறவர், கட்டாயம் உங்களுக்கு ஒரு காரியத்தைச் செய்து, அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்பதை நிரூபிப்பார். மூன்று நாட்களுக்குள் உங்கள் காரியத்தில் ஒரு அற்புதத்தைச் செய்வார். அதற்குத் தான் அவர் உயிரோடு இருக்கிறார். போகட்டும் இந்த மூன்று நாட்களை யார் யார் எப்படி பயன்படுத்திக் கொண்டார்கள், என்ன என்ன நன்மை நடந்தது என்பதைப் பார்ப்போம்.

## மூன்று நாட்கள் அவரோடு இருந்தார்கள்

பின்பு இயேசு தம்முடைய சீஷர்களை அழைத்து ஜனங்களுக்காக பரிதபிக்கிறேன். இவர்கள் என்னிடத்தில் மூன்று நாட்கள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லா

திருக்கிறார்கள். இவர்களை பட்டினியாய் அனுப்பி விட எனக்கு மனதில்லை, வழியில் சோர்ந்து போவார்களே என்றார். மூன்று நாளுக்குள் நமக்கு ஒரு காரியம், ஒரு அற்புதம் நடக்க வேண்டுமானால் நாம் அவரோடு மூன்று நாட்கள் இருக்க வேண்டும். காரணம் நாம் தேவனோடு இல்லாமல் கண் கண்ட போக்கில் போய், மனம் போன போக்கிலே போய், நாம் நம்முடைய இஷ்டத்திற்கு சுற்றித் திரிந்து கொண்டு தேவன் எனக்கு அற்புதம் செய்ய வேண்டுமென்றால் எப்படி செய்வார், எப்படி அற்புதம் நடக்கும்? நாம் அவரோடு இருக்க, அவரோடு சஞ்சரிக்க பழக வேண்டும். **2 நாளா 15:2-ல் நீங்கள் கர்த்தரோடிருந்தால், அவர் உங்களோடிருப்பார். நீங்கள் அவரைத் தேடினால், அவர் உங்களுக்கு வெளிப்படுவார் என்றார்.** ஆம் மூன்று நாளைக்குள் தேவன் நம் தலையை உயர்த்த வேண்டுமென்றால் நாம் அடிக்கடி உபவாசித்து தேவ சமுகத்தில் கூட வேண்டும். **உபா 16:16-ல் வருஷத்திலே மூன்று தரம் புளிப்பில்லாத அப்பப் பண்டிகையிலும், வாரங்களின் பண்டிகையிலும், கூடாரப்பண்டிகையிலும், உன் ஆண்மக்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தர் தெரிந்து கொள்ளும் ஸ்தானத்திலே, அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து காணப்படக்கடவர்கள் என்றார்.** எந்த ஒரு ஆண்மகனும், கர்த்தருக்காக அர்ப்பணிக்கப்பட்ட எவரும், உபவாசத்தோடு தேவ சமுகத்திற்கு வரவேண்டும். இது தேவ சட்டம், இது தேவ நீதி, இதைச் செய்யாத யாவரும் தேவனிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பார்க்க முடியாது.

இதைத்தான் இயேசுவின் நாட்களில் வனாந்தரத்தில், ஆள் நடமாட்டமில்லாத இடத்தில் ஜனங்கள் மூன்று நாட்கள் வனாந்தரத்தில் தேவனுடைய வார்த்தையை கேட்க கூடினார்கள். சாப்பாட்டை மறந்து, தூக்கத்தை மறந்து, தங்கள் வேலைகளை விட்டு, அவர் சமுகத்தில் கூடவும், ஜெபிக்கவும், அவர் சொல்லுவதைக் கேட்கவும் ஒருமனப்பட்டார்கள். ஆண்டவராகிய தேவன் ஒரு மனிதனிடத்தில் இதைத்தான் எதிர்பார்க்கிறார். **இயேசு சொன்னார் மத் 18:20-ல் ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் என்றார்.** இன்றைக்கு நமக்கு தேவவல்லமை வெளிப்பட வேண்டுமென்றால், நமக்கு வருகின்ற தீமைகள் நன்மையாய் மாற வேண்டு மென்றால், மூன்று நாளைக்குள் ஒரு மாற்றம் நிகழ வேண்டுமென்றால், அற்புதம் நடக்க வேண்டுமென்றால், மூன்று நாட்கள் அவருடைய பாதத்தில் அமர்ந்திருக்க வேண்டும், உபவாசித்து ஜெபிக்க வேண்டும். வேலையிலே பிரச்சனை இருக்கலாம், குடும்பத்திலே போராட்டம் இருக்கலாம், மற்ற மனிதர்களால் நமக்கு நெருக்கடி வரலாம், எத்தனை பிரச்சனை போராட்டம் வந்தாலும் தேவ சமூகத்தில் நாம் விழுந்து கிடக்கும் போது, உபவாசித்து ஜெபிக்கும் போது அந்த ஜெபம் பரலோகத்தின் தேவனை இந்த பூமியில் இறங்கி வரப்பண்ணும்.

**எஸ்தர் 4:16-ல் நீ போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள். நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம், இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன் என்றாள்.** ஆம் யூதருக்கு விரோதமாக ஆமான் என்பவன் ராஜாவினிடத்தில் சென்று யூதர்களுக்கு விரோதமாக பேசி, சட்டத்தை மாற்றி, கொடுமைபடுத்தப்படவும், அழிக்கவும், பயங்கரமான கிரியை செய்ய ஆரம்பித்தான். யூதர்களைநாட்டை விட்டே, பூமியை விட்டே துரத்தி அழிக்க ஆமானும், அவனுடைய சகாக்களும் செயல்பட்டார்கள். ஆனால் எஸ்தரே, இந்த கெடு வைக்கப்பட்ட அந்த நாளிலே, மூன்று நாட்கள் அவளும், அவள் தாதிமார்களும், யூத ஜனங்களும் உபவாசித்து ஜெபிக்க ஆரம்பித்தார்கள். புசியாமலும், குடியாமலும் தேவ சமுகத்தில் மூன்று நாட்கள் விழுந்து கிடந்தார்கள். இவர்கள் செய்த இந்த மூன்று நாட்கள் உபவாச ஜெபம் தேவ சமுகத்தை எட்டியது. தேவன் எஸ்தருக்கும், யூத குலத்திற்கும் இரங்கினார். நடந்தது என்ன? **எஸ்தர் 9:1-ல் சொல்லுகிறது காரியம் மாறுதலாய் முடிந்தது.** பரலோகத்தின் தேவன் அவருடைய பிள்ளைகளுக்காக எழுந்தருளினார். **தேவன் எழுந்தருளுவார், அவருடைய சத்துருக்கள் சிதறுண்டு, அவரைப் பகைக்கிறவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப்போவார்கள் என்று சங் 68:1** சொல்லுகிறது. எப்பவுமே நம் எதிரி, நமக்கு

கெடு வைக்கிறான், நாள் குறிக்கின்றான் என்றால், நமக்கு அல்ல, அவனுக்கு அவனே கெடு வைக்கிறான். அந்த மூன்று நாட்களின் ஜெபம், புசியாமலும், குடியாமலும் இருந்த அந்த உபவாச ஜெபம் ஒரு பெரிய மாற்றத்தை, அற்புதத்தைச் செய்தது. தேசத்தின் காரியங்களையே மாற்றிப் போட்டது. ஆம் நாம் மூன்று நாட்கள் அவரோடு இருக்கும் போது, மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபிக்கும் போது கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச் செய்கிறார். அப்பொழுது தான் அவர் சொன்ன வார்த்தை, தீர்க்கதரிசனம் நமக்கு நிறைவேறுகிறது. மூன்று நாட்களுக்குள் அவன் தலை உயர்த்தப்பட்டது.

**தானியேல் 6:10-13 வசனங்களில் தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும், தன் வீட்டிற்குள்ளே போய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராகப் பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்து வந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்.** தானியேல் மூன்று நாள் மட்டுமல்ல, தினமும் மூன்று வேளையும், காலை, மாலை, இரவு மூன்று நேரமும் ஜெப நேரமாக வைத்திருந்தான். ஒரு நாளைக்கு கிட்டதட்ட ஆறு மணி நேரம் ஜெபத்தில் தரித்திருந்தான். ஆறு மணி நேரம் ஓய்வு, 12 மணி நேரம் அரசு வேலையை செய்து தன் முழங்கால் ஜெபத்தால்,தன் மூன்று வேளை ஜெபத்தால் முழு ராஜ்யத்தையும், ராஜாவையும் தன் கையில் வைத்திருந்தான். அந்த தேசத்தில் தானியேல் மூன்று வேளை ஜெபித்ததினால் அங்கே கிரியை செய்த ஆவிகள் கட்டப்பட்டு அழிக்கப்பட்டது, தேவ நாமம் உயர்த்தப்பட்டது. அவனுக்கு விரோதமாய் எழும்பினவர்கள் அழிக்கப்பட்டார்கள். தானியேலின் காரியம் ஜெயமாய் இருந்தது. காரணம் அவன் மூன்று வேளையும் ஜெபம் பண்ணி, பரிசுத்த ஆவியினால் நிரம்பி, மூன்று நாட்களை மூன்று நேரமாக மாற்றி தன் தேவனை தேசத்தில் நிருபித்தார். இன்றைக்கு நீங்களும் இப்படி செய்து பாருங்கள், மூன்று நாளைக்குள்ளே கர்த்தர் உங்களுக்கு ஒரு அற்புதத்தைச் செய்து, உங்கள் தலையை உயர்த்தி, முன்பைக் காட்டிலும், பெலத்தையும், சத்துவத்தையும் தந்து ஆசீர்வதித்து பெரிய காரியங்களைச் செய்வார்.

## மூன்று நாளைக்குள்ளே உங்களை எழுப்புவார்.

**இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாளுக்குள்ளே எழுப்புவேன் என்றார். யோவான் 2:19.** நம்முடைய தேவன் மூன்றே நாளில் ஒருவனை உயிரோடு எழுப்ப முடியும். ஆகவே தான் யூதருக்கு சவால் விட்டு சொல்லுகிறார் என்னை கொன்று போடுங்கள், என்னை அழித்துப் போடுங்கள் மூன்றே நாளில் எழும்புவேன், எழுந்திருப்பேன் என்றார். கீழ்ப்படியாத யோனாவை, தேவ சித்தத்தை நிறைவேற்றாத யோனாவை விழுங்கும்படி, உடைத்து உருவாக்கும்படி கர்த்தர் ஒரு பெரிய மீனுக்கு கட்டளையிட்டார். அது மூன்று நாட்களுக்கு அசை போடாமல் தேவன் கொடுத்த கட்டளையை நிறைவேற்றி, பத்திரமாய் தன் வயிற்றிலே யோனாவை பாதுகாத்து மூன்று நாட்கள் முடிந்தவுடனே அது அவனை தரையிலே கக்கிப் போட்டது. அந்த மீன் தண்ணீர் குடியாமல், புசியாமல் இருந்தபடியால், உபவாசித்தபடியால் யோனா பத்திரமாக அங்கே தேவனால் பாதுகாக்கப்பட்டு கரைக்கு திரும்பினார்.

பேதுருவைப் பாருங்கள் எல்லாரும் மறுதலித்தாலும் நான் மறுதலிக்க மாட்டேன் என்று இயேசுவுக்கு முன்பாக சவால் விட்டான். நடந்தது என்ன? கடைசியாக எல்லாரும் அமைதியாக இருந்தார்கள், பேதுரு மூன்று முறை மறுதலித்தான். அவரை தெரியாது என்று சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான். கடைசியாக இருதயத்தில் குத்தப்பட்டு, உடைக்கப்பட்டு மூன்று முறை பாவ அறிக்கை செய்து நான் உம்மை நேசிக்கிறேன், நான் உம்மில் அன்பாயிருக்கிறேன் என்றான். மூன்றே நாளில் தேவன் அவருடைய வாழ்க்கையை கட்டியெழுப்பி, பின்வாங்குதலிருந்து உயிர்ப்பித்தார், மாற்றினார். அதைத்தான் வேதத்தில் நம்முடைய ஆண்டவராகிய தேவன் சொல்லுகிறார் **ஓசியா 6:1,2-ல் கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள், நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார். நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். இரண்டு நாட்களுக்குப் பின்பு அவர் நம்மை உயிர்ப்பிப்பார், மூன்றாம் நாளில் நம்மை**

**எழுப்புவார், அப்பொழுது நாம் அவர் சமுகத்தில் பிழைத்திருப்போம் என்றார்.** சிலபேரை திருத்த, மாற்ற பல வருஷங்கள், பல மாதங்கள் ஆனது. யாக்கோபு 20 வருஷம் தேவனை மறந்து, தேவ திட்டத்தை நிறைவேற்றாமல் இருந்தார். சவுல் 40 வருஷம் தேவனுடைய திட்டத்திற்குள் வராமல் பரிதாபமாக மரித்துப் போனான். ஆனால் இயேசுவினுடைய சிலுவை பாடுகளுக்குப் பின்பு மூன்றே நாளில் மனமாற்றம் நடந்தது. மூன்றே நாளில் எழுப்புதல் உண்டானது. மூன்றே மணி நேரத்தில் வியாதிகள் சுகமடைந்தது. மூன்றே நிமிடத்தில் எசேக்கியாவின் ஜெபம் கேட்கப்பட்டு சுகமடைந்து ஆயுசு நாட்கள் கூட்டிக் கொடுக்கப்பட்டது. மூன்றே நாளில் அப்போஸ்தலனாகிய பவுல் சந்திக்கப்பட்டு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டான். **அப் 9:9-ல் அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும் குடியாமலும் இருந்தான்.** காரணம் தெற்கத்தி வெள்ளங்களை திருப்புவது போல தேவன் பவுலுடைய இருதயத்தை திருப்பினார். ஒரு மனிதன் மனதை மாற்றவும், உயிர்ப்பிக்கவும், அவருக்குள் எழுப்பவும் மூன்று நாள் போதும். ஆகவே தான் இயேசு சொன்னார் இந்த ஆலயத்தை இடித்து விடுங்கள் மூன்றே நாளில் எழுப்புவேன் என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே நம் வாழ்க்கை எப்படியிருக்கிறது. நம்முடைய காரியங்கள் எப்படி இருக்கிறது எத்தனை வருஷங்கள், எத்தனை மாதங்கள் நாம் உழன்று, போராடிக் கொண்டிருக்கிறோம். மரித்தேன் ஆனாலும் சதாகாலங்களிலும் நான் உயிரோடிருக்கிறேன் என்றவர், இன்றைக்கு உங்கள் போராட்டத்திற்கும், உங்கள் பிரச்சனைக்கும் ஒரு முற்றுப்புள்ளி, ஒரு முடிவை உண்டு பண்ண விரும்புகிறார். அவரால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை. முடியாத காரியம் ஒன்றும் இருக்கப் போவதும் இல்லை. கட்டாயம் உங்களுக்கு ஒரு அற்புதத்தை, விடுதலையைத் தருவார். மூன்று நாட்கள் அவர் சமுகத்தில் அவரோடு இருந்த ஜனங்களுக்கு அற்புதம் செய்தார். மூன்று நாட்கள் உபவாசித்து ஜெபித்த ஜனங்களுக்கு அற்புதம் செய்தவர் உங்களுக்கும் செய்வார். உங்களை பின் தொடருகிற பிசாசின் போராட்டங்கள், பிசாசின் கிரியைகளை மூன்று நாளைக்குள் ஒரு முடிவுக்கு கொண்டு வருவார். இயேசு சொன்னார் தன்னைக் கொல்ல, அழிக்கத் தேடிக் கொண்டிருந்த ஏரோதுவைப் **பார்த்து லூக் 13:32,33-ல் அதற்கு இயேசு, நான் இன்றைக்கும் நாளைக்கும் பிசாசுகளைத் துரத்தி, வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்கி மூன்றாம் நாளில் நிறைவடைவேன் என்றார்.** பிசாசுகளைத் துரத்தவும், வியாதிகளை சுகமாக்கவும், மரித்துப் போனவர்களை உயிரோடு எழுப்பவும் அவரால் ஆகும். ஒருமுறை டாக்டர் பால் யாங்கிச் சோ என்ற தேவ மனிதர் தன் ஆலயத்திற்குள் பிரவேசித்துக் கொண்டிருந்த போது மயங்கி விழுந்து விட்டார். அவரை பரிசேதித்த மருத்துவர்கள் சொன்னார்கள் அவருக்கு உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றார்கள். அப்பொழுது போதகர் பால் யாங்கிச் சோ அவர்கள் சொன்னார்கள், எனக்கு மூன்று நாட்கள் வாய்ப்பு கொடுங்கள் பிறகு வந்து சொல்கிறேன் என்று அங்கிருந்து நேராக அவர் வைத்திருந்து ஒரு ஜெப மலையில் போய் மூன்று நாட்கள் ஜெபித்தார்கள். அந்த ஜெபம் முடிந்தவுடனே பரிசோதித்து பார்த்த போது எல்லா பெலவீனமும், எல்லா வியாதியும் அவரை விட்டு முற்றிலும் நீங்கி இருந்தது. காரணம் தேவ சமூகத்தில் அவர் விழுந்து கிடந்து ஏறெடுத்த ஜெபங்கள் தான். மூன்றே நாளில் ஒரு மாற்றத்தை ஒரு அற்புதத்தை நடப்பித்தது. ஆம் நம் ஆண்டவராகி இயேசு கிறிஸ்து இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார். அவர் அற்புதங்களைச் செய்கிறவர். ஆகவே தான் மூன்றே நாளில் ஒரு அற்புதத்தை செய்து உன் தலையை உயர்த்துவார் என்றார். இன்றைக்கு இந்த செய்தியை வாசித்து, ஜெபிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளேதேவன் வரும் நாட்களில் உங்களுக்கு மகிமையாக காரியங்களை செய்து உங்களை ஆசீர்வதித்து உங்கள் வாழ்வை கட்டியெழுப்பி மேன்மையான காரியங்களை தேவன் செய்வாராக.



சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

# உன்னை சேர்த்துக் கொள்ளுவேன்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

ஒரு நாடகமொன்றை பள்ளிக்கூடத்தில் ஆயத்தம் செய்தார்கள். அந்த வகுப்பில் சரளமாக பேச்சு வராத ஒரு சிறுபையன் இருந்தான். திக்கி திக்கி, கொஞ்ச நேரம் கழித்து தான் வார்த்தைகளைப் பேசமுடியும். அதனால் அவனை இந்த நாடகத்தில் சேர்த்துக் கொள்ளாமல் இருந்தார்கள். இதை அறிந்த அவன் தாய் பள்ளிக்குச் சென்று என் மகனைச் சேர்த்துக் கொள்ளாமல் விலக்கிவிட வேண்டாம். அவனுக்குத் தாழ்வு மனப்பான்மை ஏற்படும். சின்ன பகுதியாவது கொடுங்கள், நான் அவனை எப்படியாவது தயார் செய்து விடுகிறேன் என்றாள். உடனே அவர்களும் அவனை சேர்த்துக் கொண்டு, மரியாளும், யோசேப்பும் சத்திரத்தில் இடம் கேட்டு போகிற போது **இங்கே இடமில்லை** என்ற வார்த்தையை மட்டும் சொல்லும்படியாக அவனுக்கு ஒரு சிறுபகுதியைக் கொடுத்தார்கள். அந்த நாளில் நாடகம் நடைபெறுகிற போது, மரியாளும், யோசேப்பும் ஐயா, இங்கே தங்க எங்களுக்கு இடமுண்டா என்று கேட்கும் போது சிறுவன் வாய் திறக்கவில்லை. பின்பக்கத்திலிருந்து ஆசிரியர் இடமில்லை என்று சொல்லு என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் ஐயோ கேவலப்படுத்துகிறானே என்றனர். அம்மா மனம் கலங்கி சொல்லு, சொல்லு என்றாள். சற்று நேரம் கழித்து அந்த சிறுவன் ஐயா! இங்கு இடமில்லை, எங்கள் வீட்டிற்கு வாருங்கள் அங்கு இடமிருக்கிறது என்று கண்ணீரோடு சொன்னான். பயங்கரமான கைதட்டல் எழும்பியது. அவனுக்கு பாராட்டுக்கள் குவிந்தது.

இப்படி ஏதோ ஒரு தகுதியின்மையை நினைத்து, உலகம் நம்மை புறக்கணிக்க நேரிடலாம். ஆனால் அந்த தாய் பள்ளியில் பேசி தன் மகனை சேர்த்தது போல ஆண்டவர் நம்மை, தகுதியில்லாத நம்மை தம்மோடு சேர்த்துக் கொள்கிறார். **ஏசாயா 54:7-ல் இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன், ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்ளுவேன்** என்று அவர் சொல்லுகிறார். எத்தனை சந்தோஷம்.

## தள்ளுண்டவர்களைச் சேர்த்துக் கொள்கிறார்

நம் ஆண்டவர் எப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்கிறார். தள்ளுண்டவர்களைச் சேர்த்துக் கொள்கிறார். **ஏசாயா 56:8-ல் இஸ்ரவேலில் தள்ளுண்டவர்களைச் சேர்க்கிற கர்த்தராகிய ஆண்டவர், அவனிடத்தில் சேர்க்கப்பட்டவர்களையல்லாமல் இன்னும் அவனிடத்தில் சேர்ப்பேன் என்கிறார்.** மிரியாம், மோசேயுடனே பிரயாணமாய் வரும்போது கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ? எங்களைக் கொண்டு பேசினதில்லையோ? என்றாள். கர்த்தர் அதைக் கேட்டார். உண்மையில் மோசேயோடு கர்த்தர் பேசினதற்காக மட்டும் அவள் சொல்லவில்லை. அவள், மோசே எத்தியோப்பிய பெண்ணை திருமணம் முடித்து விட்டான் என்கிற கோபம், அவன் மேல் அவளுக்கு இருந்தது. எண் 12:1,2 வசனங்கள்

சொல்கிறது. அதினிமித்தம் தேவகோபம் எழும்பியது. **எண் 12:14,15-ல் கர்த்தர் மோசேயை நோக்கி, அவள் தகப்பன், அவள் முகத்திலே காறித்துப்பினதுண்டானால் அவள் ஏழுநாள் வெட்கப்பட வேண்டாமோ? அதுபோலவே அவள் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்தாள், மிரியாம் சேர்த்துக் கொள்ளப்படுமட்டும் ஜனங்கள் பிரயாணம் பண்ணாதிருந்தார்கள்** என்று வாசிக்கிறோம். தேவனுடைய மனுஷனாகிய மோசேக்கு விரோதமாக பேசினதினிமித்தம் மிரியாம் தள்ளுண்டு போனாள். பாளயத்துக்குப் புறம்பே விலக்கி வைக்கும்படியான குஷ்டரோகம் அவளுக்கு வந்தது. இதைப் பார்த்த மோசே ஆண்டவரிடம் கதறினான். ஆண்டவரே அவளை குணமாக்கும், அவள் புத்தியீனமாய் செய்த பாவத்தை அவள் மேல் சுமத்தாதிரும் என்றான். தேவன் இரங்கினாலும், சின்ன சிட்சையாக ஏழுநாள் அவளைப் பாளயத்திற்குப் புறம்பே இருக்க வைத்து, பின்பு சேர்த்துக் கொண்டார். ஆண்டவரே விலக்கியிருந்த அவளைச் சேர்த்துக் கொண்டார்.

பாவம் நம்மை தேவனை விட்டு பிரித்து விடுகிறது. ஆதாமும், ஏவாளும் ஆண்டவரோடு தோட்டத்தில் உலாவி அவர் சத்தம் கேட்டனர். செய்ய வேண்டாம் என்று சொன்னதை செய்ததின் விளைவு அங்கிருந்து தேவன் துரத்தினார். பூமிக்குப் போ! எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாயோ அங்கேயே போய் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபடு என அனுப்பிவிட்டார். **எரே 29:14-ல் நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி, நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும், எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்த்து, நான் உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்** என்று வாசிக்கிறோம். நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலிருந்து உங்களைச் சேர்த்து, உங்களை விலக்கி இருந்த ஸ்தலத்துக்கே கொண்டு வருவதாக ஆண்டவர் சொல்கிறார்.

இயேசுவைப் பாருங்கள், ஐந்து புருஷர்களோடே வாழ்ந்து, ஆறாவது ஒருவரோடு இருக்கும் சமாரியப் பெண். அவளிடம் இயேசு தண்ணீர் கேட்கிறார். **யோவான் 4:9-ல் யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங் கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி, நீர் யூதனாயிருக்கிறீரே, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில் தாகத்துக்குத்தா என்று தண்ணீர் கேட்கிறீரே என்றாள்.** அப்படி விலக்கப்பட்டவள், பாவத்தோடு இருக்கிறவள், இயேசு அவளைத் தேடிப் போய் மனம் திருப்பி தம்முடையவளாகச் சேர்த்துக் கொண்டார். சகேயு வரிவசூலிப்பவன், ஆயக்காரன். **லூக்கா 19:7-ல் இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று ஜனங்கள் முறுமுறுத்தார்கள்.** தள்ளப்பட்ட, ஒதுக்கி விடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மனிதர்களை ஆண்டவர் சேர்த்துக் கொள்கிறார். **எரே 30:17-ல் அவர்கள், உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.** மனிதர்கள் நம்மை விலக்கித் தள்ளியிருந்தாலும் நம்மை அவர் சேர்த்துக் கொள்கிறவராயிருக்கிறார். அதனால் தான் தாவீது **சங் 27:10-ல் என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார்** என்கிறான். மனிதர்களால் தள்ளுண்ட யாவரையும் கர்த்தர் சேர்த்துக் கொள்வார். யோவான் 9:34,35-ல் பிறவிக்குருடனைத் தேவாலயத்தை விட்டு புறம்பே தள்ளிவிட்டார்கள். அவன் இயேசுவைப் பற்றிப் பேசினதினிமித்தம் பரிசேயர் செய்ததை இயேசு அறிந்து, அவனை அவர்கள் புறம்பே தள்ளிவிட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டார். அவனோடு பேசி தம்மை வெளிப்படுத்தினார்.

அதனால் தான் தள்ளுண்டவர்களை அவர் சேர்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கையோடு ஏசாயா சொல்லுகிறான். நெகே 1:9-ல்.....தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ள திரும்ப இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலிலே துரத்துண்டவர்களைச் சேர்த்து யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார். துரத்துண்ட, தள்ளுண்ட யாவரையும் மன்னித்துச் சேர்த்துக் கொள்கிறவர். நம் ஆண்டவர் இரண்டாம் விசை கையை நீட்டி நம்மை இழுத்துக் கொள்கிறவர்.

## நீர் சேர்த்துக் கொள்கிறவன் பாக்கியவான்

கோழி, வானத்திலே வட்டமிடும் பருந்துக்கு தன் குஞ்சுகள் இரையாகி விடக்கூடாதே என்று பலத்த சத்தமிடும், குஞ்சுகள் சத்தம் கேட்டு தாய்க் கோழியின் சிறகுக்குள் வந்து விட்டால் தப்பித்துக் கொள்ளும் என்று தான். ஆண்டவர் அழைக்கிறார் **சங் 65:4-ல் உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான்** என்று சங்கீதக்காரன் சொல்கிறார். ஆண்டவரோடு, அவர் பிரசன்னத்தில் களிகூருகிற மனுஷன் பாக்கியவான். ராகாப் என்ற வேசியின் வீட்டில் வேவுகாரராய், யோசுவா அனுப்பின இரண்டு பேரை அவள் ஒளித்து பாதுகாத்ததினிமித்தம், இஸ்ரவேலின் தேவனை நம்பினதினிமித்தம் **யோசுவா 2:17-ல் நாங்கள் இந்த தேசத்துக்குள் பிரவேசிக்கும்போது, நீ இந்தச் சிவப்பு நூல் கயிற்றை எங்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே கட்டி, உன் தகப்பனையும், உன் தாயையும், உன் சகோதரர்களையும், உன் தகப்பன் குடும்பத்தார் அனைவரையும் உன்னிடத்தில் உன் வீட்டில் சேர்த்துக் கொள்** என்று சொல்கிறதை நாம் வாசிக்கிறோம். அவள் நிமித்தம் வீட்டார் அனைவருக்கும் தயவு கிடைத்தது. அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இந்த தயவு தான் நம்மையும், நம் வீட்டரையும் சேர்த்துக் கொள்ளப்போகிறது. **ஆகாய் 2:23-ல் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக் கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உன்னைத் தெரிந்து கொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்** என்று சொல் என்றார். ஊழியக்காரர்களைச் சேர்த்துக் கொள்கிறவர்.

ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாயிருந்த ஒருவன் ஏதோ தவறினிமித்தம் சிறையிலடைக்கப்பட்டான். யோசேப்பு சிறையிலடைக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் சொப்பணம் கண்டு அதை யோசேப்பு அவனுக்கு விவரித்தபடியே திரும்பவும் தன் ஸ்தானத்தில் நிலை நிறுத்தப்பட்டான். பெருமையினிமித்தம் மாட்டைப் போல புல் மேய்ந்து கொண்டிருந்த நேபுகாத்நேச்சார் மனம் வருந்தி தன் அகந்தையையும், மேட்டிமையையும் உணர்ந்து, தன்னை தாழ்த்தின போது திரும்பவும் அந்த ஸ்தானத்தைப் பெற்றான். சக 3:1-10 வசனங்களில் பிரதான ஆசாரியனாயிருந்த யோசுவா அழுக்குப்பட்டிந்த ஆடை அணிந்திருந்த போது, அதை அகற்றி, சிறந்த வஸ்திரத்தை உடுத்தி நிலை நிறுத்தினவர், தேவபிள்ளைகள் வாழ்வில் இருக்கும் குறைகள், கறைகள் யாவும் போக்கி நம்மைச் சேர்த்துக் கொள்வது மட்டுமல்ல, முத்திரை மோதிரமாக, முக்கியமான நபராக மாற்றுவார். அதனால் தான் தாவீது நீர் தெரிந்து கொண்டு சேர்த்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான் என்கிறார்.

ஆடுகள் பின்னே தேவனைத் துதித்துக் கொண்டிருந்த தாவீதை, சாமுவேலைக் கொண்டு தைலக்குப்பியை எண்ணெயால் நிரப்பி, தேடிப் போய் தெரிந்து கொண்டு அபிஷேகித்து தேவன் சேர்த்துக் கொண்டார். **1 நாளா 16:34,35-ல் கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. எங்கள் இரட்சிப்பின் தேவனே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி, உம்மைத் துதிக்கிறதினால் மேன்மை பாராட்டும்படிக்கு, எங்களை இரட்சித்து, எங்களைச் சேர்த்துக் கொண்டு, ஜாதிகளுக்கு எங்களை நீங்கலாக்கியருளும் என்று சொல்லுங்கள்** என்கிறான். ஆண்டவரே! எங்களை இரட்சிக்கிறவரே! உமது நாமத்தைப் போற்றித் துதிக்கிறதைக் குறித்து நாங்கள் மேன்மை பாராட்ட எங்களைச் சேர்த்துக் கொள்ளும். இன்னல்களுக்கு நீங்கலாக்கும் என்று ஜெபிக்கிறான். நாம் ஆண்டவரைப் போற்றித் துதிக்கிற போது, ஜெபிக்கிற போது நாம் மேன்மை பாராட்டும்படியான காரியங்களை தேவன் நமக்குச் செய்தருளுவார். **சங் 107:1-3-ல் கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு, கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும் தெற்கிலுமுள்ள பல தேசங்களிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்கள், அப்படிச் சொல்லக் கடவர்கள்.** கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டவர்களும், நான்கு திசைகளிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்கள் கர்த்தரைத் துதித்து, அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று சொல்ல வேண்டும் என்று கூறுகிறதைப் பார்க்கிறோம்.

## சிட்சித்து சேர்த்துக் கொள்கிறார்

இப்போது உள்ள கால சூழ்நிலையில் எல்.கே.ஜீ-க்கு கூட நுழைவுத் தேர்வு வைத்துதான் பிள்ளைகளை ஸ்கூலில் சேர்த்துக் கொள்கிறார்கள். ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாறினால் அங்கும் நுழைவுத் தேர்வு, தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு கூட தகுதித் தேர்வு வைக்கப்படுகிறது. எப்படியோ ஒரு சிட்சையில் தான் சேர்க்கப்படுகிறார்கள். **எபி 12:6-ல் கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்** என்று வாசிக்கிறோம். சிட்சித்துச் சேர்த்துக் கொள்வது ஆண்டவரின் வழிகளில் ஒன்று. எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைத்தான் சிட்சிக்கிறார். நாம் சிட்சை, பாடுகள் வந்த உடனே ஆண்டவர் என்னை மறந்துவிட்டாரோ! கைவிட்டுவிட்டாரோ! என்று எண்ணுகிறோம். அன்பு கூர்ந்ததால் தான் சிட்சிக்கிறார். சிட்சை வரும்போது தேவன் என்னை அளவில்லாமல் நேசிக்கிறார் என்று எண்ண வேண்டும். யாத் 6:6,7-ல் ஆண்டவர் எகிப்தின் எல்லாச் சுமைகளை நீக்கி, அடிமைதனத்திற்கு நீங்கலாக்கி, ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்டு, உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக் கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன், உங்கள் மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி, உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள். தண்டனைகளால் அவர் நம் ஆத்துமாவை மீட்டுக் கொள்கிறார்.

ஆபிரகாமைப் பாருங்கள் தேவனை அளவில்லாமல் நேசித்த அவன் இருதயம், மகன் ஈசாக்கு வந்த உடனே தேவனை விட அதிகமான நேரம் ஈசாக்கோடு செலவு பண்ணினான். ஒருவேளை, இன்று பரவாயில்லை நேரமாகிவிட்டது. ஆண்டவரை சந்திக்காவிட்டால் என்ன? ஆண்டவருக்கு என் நிலை தெரியுமே என்று இப்படி இருந்திருப்பானோ? அதிகமாய் நேசிக்கிற உன் ஏகசுதனும், ஏகபுத்திரனும், உன் நேசகுமாரனை தகனபலியாக பலியிடு என்ற ஒரு சிட்சையை அனுமதித்தார். ஆபிரகாம் சற்று திகைத்திருப்பான், ஏன் என்று யோசித்துப் பார்த்திருப்பான். அவனுக்குத் தெரிந்துவிட்டது ஆண்டவரை விட அதிகம் ஈசாக்கின் மேல் அன்பு வைத்திட்டேன், எனக்கு ஈசாக்கை விட ஆண்டவர் வேண்டும் என்ற கட்டத்திற்கு அவன் வரும் வரை எவ்வளவு நொறுங்கி இருப்பான். இந்த சின்ன சிட்சையால் ஆபிரகாமை, தேவன் தன்னை விட்டுப் பிரிந்திருந்த அவனை தம்முடைய அன்பினால் சேர்த்துக் கொண்டார். ஏதோ ஒன்று நம்மை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கலாம், இஸ்ரவேலரை எகிப்து அடிமைப்படுத்தியது. **உபா 4:20-ல் இந்நாளில் நீங்கள் இருக்கிறதுபோல, தமக்குச் சுதந்தரமான ஜனமாயிருக்கும்படி கர்த்தர் உங்களைச் சேர்த்துக் கொண்டு, உங்களை எகிப்து என்னும் இருப்புக்காளவாயிலிருந்து புறப்படப்பண்ணினார்.** தமக்கு சுதந்தரமாயிருக்கும்படி அடிமைத்தனத்திலிருந்து அவர்களைச் சேர்த்துக்கொள்ள கொண்டு வந்தார். **உபா 30:3-லும் உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற, உன்னைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளுவார்** என்று பார்க்கிறோம். நம்முடைய எல்லா சிறையிருப்பையும், திருப்ப யாரால் கூடும், நமக்கு இரங்க யாரால் கூடும், இயேசு ஒருவரே நம்மைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளப் போகிறார். **செப் 3:20லும் உங்களைக் கூட்டிக் கொண்டு வருவேன், உங்களைச் சேர்த்துக் கொள்ளுவேன்** என்றார். அது மட்டுமல்ல **யோவான் 14:3-ல் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்** என்றார். எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். நம்மை அவரோடு சேர்த்துக்கொள்ள அதிசீக்கிரம் வரப்போகிறார். அவர் வந்து, அவருக்காக வாழ்ந்த, எதிர்பார்ப்போடு காத்திருக்கிற நம்மை அவரோடு சேர்த்துக் கொள்வார். நாம் அவரோடு இருப்பது எத்தனை பாக்கியம். அவர் நம்மை தம்மோடு சேர்த்துக் கொள்வது எத்தனை ஆனந்தம்!. அவரை விட்டுப்பிரிந்த, தள்ளுண்ட நம்மை அணைத்துக் கொள்ளும், அவரது அன்பு எத்தனை பெரியது. உன்னை இரக்கங்களால் சேர்த்துக் கொள்ளுவேன் என்று சொன்ன ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் சேர்த்துக் கொள்வாராக!.



# சிலுவையிலிருந்து வரும் நற்செய்தி நமக்கோ நம்பிக்கையும் வல்லமையும் அளிக்கிறது

*சகோதரி. பிரேமா டேவிட்*

**சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. 1 கொரி 1:18**

கிறிஸ்துவில் அன்பான வாலிபத் தம்பி தங்கைகளே, நமக்காக சிலுவையைச் சுமந்து, சிலுவையில் மரித்து, சிலுவையில் சாத்தானை வெற்றி சிறந்த நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் வாழ்த்துக்கள். சிலுவை - ஒரு அவமானத்தின் சின்னமாக, சாபத்தின் சின்னமாக, அடிமைகளுக்கு தண்டனை கொடுக்கும் கருவியாக நான்காம் நூற்றாண்டு வரை இருந்து வந்தது. என்றைக்கு இயேசு கிறிஸ்து யூதமத குருக்களால் சிலுவையில் அறையப்பட வேண்டுமென்று ஒப்புக்கொடுக்கப்பட்டு சிலுவையில் மரித்தாரோ, அந்த நாள் முதற்கொண்டு சிலுவை ஒரு வெற்றியின் சின்னமாக, ஆசீர்வாதத்தின் அடையாளமாக மாறிவிட்டது. வெறும் சிலுவைக்கு இத்தனை மேன்மை இல்லை. ஏனென்றால் எத்தனையோ மனிதர்களை அந்த நாட்களில் சிலுவையில் அறைந்திருப்பார்கள். அவர்களால் நமக்கோ, இந்த உலகத்திற்கோ எந்த நன்மையும் கிடைக்க வாய்ப்பில்லை, ஏனென்றால் அவர்களெல்லாரும் படைக்கப்பட்டவர்கள், மனிதர்கள்.

இன்னும் சொல்வோமானால் சிலுவை என்றாலே நமக்கு ஒரு சந்தோஷம், மேன்மை, தேவ பெலனாயிருக்கிறது. ஏனென்றால் சிலுவையை சகித்து, சுமந்து அதிலே தன் இரத்தத்தையெல்லாம் சிந்தி, தன் ஜீவனைக் கொடுத்தவர், நம்மைப் படைத்தவரான ஆண்டவர் இயேசு கிறிஸ்து குற்றமற்ற, மாசற்றவர், உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியாக அதிலே பலியானதினால் தான் சிலுவைக்கு மேன்மை, அதினால் சிலுவையை அணிந்து கொள்வதாலோ, சுமந்து செல்வதாலோ நமக்கு சந்தோஷமும், வல்லமையும் கிடைக்கப் போவதில்லை. அப்படியென்றால் எப்படி சிலுவையிலிருந்துது கிடைக்கிற வல்லமை, பெலன், சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்வது?

இந்த உலகத்தில் எல்லாரும் சிலுவையின் நற்செய்தியை விரும்புவதுமில்லை, கேட்பதுமில்லை. அந்நாட்களில் யூதர்களுக்கு இயேசு என்றாலே வெறுப்பு. மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு எதிரான புது உபதேசம் பண்ணுகிறார், தன்னை தேவனுடைய குமாரன் என்கிறார் என்று. இயேசுவால் என்ன நன்மை என்று அவரை அறியாதவர்களுக்கும், அவரை நம்பாதவர்களுக்கும், அவரை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்களுக்கும் அது பைத்தியமாயிருக்கிறது, முட்டாள்தனமாய்த் தெரிகிறது. உண்மையில் இயேசு நம் எல்லாருடைய பாவங்களையும் அவர் தன்மேல் ஏற்றுக்கொண்டார். இந்த பாவத்திற்கு வரும் தண்டனை மரணம் தான், பாவத்தோடு மரித்தால் சாத்தானும், பிசாசு கூட்டமும் இருக்கிற நித்திய அக்கினியிலே போடப்படுவது உறுதி தான் என்று தெரிந்தும், பாவம் செய்ததின் பின்விளைவுகளான அவமானம், தலைகுனிவு, வெட்கம், வேதனை, புறக்கணிப்பு, எல்லாராலும் தள்ளப்பட்ட, கைவிடப்பட்ட நிலைமை, துக்கம், துயரம், சாபம், வியாதி, வறுமை, வெறுமை என அனைத்தையும் தன் மேல் ஏற்றுக்கொண்டு, சுமந்துகொண்டு பாவநிவிர்த்தி செய்யும்பலியாக சிலுவையிலே மரித்ததினால் பிதாவிடமிருந்து பாவ மன்னிப்பையும், பரலோகம், நித்திய ஜீவன் பெறும் நம்பிக்கையை தந்துள்ளார்.

அதேபோல பூமியை ஆளும் அதிகாரம் உரிமையை ஆதிப்பெற்றோர், சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு இழந்ததை, மீண்டும் மனிதருக்கு மீட்டுக்கொடுப்பதற்காக மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசை தமது மரணத்தினாலே அழிக்கும்படியாகவும், சிலுவையிலே அவனை ஒன்றுமில்லாமல் ஆக்கி, அவனிடமிருந்து சகல வல்லமைகளையும் உரிந்துகொண்டு, அவனை சிலுவையிலே வெற்றி சிறந்ததால் நமக்கு இனி பாவம், மரணம், சாத்தானின் சாபம், வியாதி, தீமையான அனைத்து சிந்தனை, உணர்ச்சி செயல்களையும் ஜெயிக்கும், மேற்கொள்ளும் வல்லமையை அளிக்கிறார். இதுதான் சிலுவையிலிருந்து வருகிற நற்செய்தி.

தேவனுக்கும், மனிதருக்கும் (ஏதேன் தோட்டத்திலிருந்து உண்டான பாவத்தினால்) இருந்த பகையை இயேசு தமது சிலுவையினாலே கொன்று இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக ஒப்புரவாக்கி விட்டார். (எபே 2:16, கொலோ 1:20).

நற்செய்தி இந்த சிலுவையிலிருந்து வரும், யார் விசுவாசித்து, நம்பி இயேசுவே நான் ஒரு பாவி, என் பாவத்திற்காக நீர் சிலுவையில் மரித்து உயிர்தெழுந்தீர் என்பதை என் உள்ளத்தில் விசுவாசிக்கிறேன். என் பாவங்களை மன்னித்து உம் இரத்தத்தால் கழுவிவிடும். இயேசுவே நீரே என் ஆண்டவர், நீரே என் இரட்சகர் என்று அறிக்கை செய்து, நாவினால் சொன்னால் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் அல்லது நாம் மனந்திரும்பி, பாவமன்னிப்பின் நிச்சயம் பெற்று, இரட்சிப்பை பெற்றுக் கொள்கிறோம். அப்படி விடுதலை பெற்ற, பெறப்போகிற, இரட்சிக்கப்பட்ட, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது. இயேசு தான் தெய்வம் என்ற நம்பிக்கையையும், பாவம், சாபம், வியாதி, சாத்தானின் தந்திரங்களை, எதிரான எல்லாத் திமையையும் வராமல் தடுக்கவும், வந்தாலும் மேற்கொள்ளும் வல்லமையையும், பெலனையும் அது நமக்கு தருகிறது. எந்தப் பெற்றோரும், எந்த மகனும் செய்யாத அந்த தியாகச் செயலை இயேசு நமக்காக சிலுவையில் செய்தபடியால், ஜீவனைக் கொடுத்ததை, அவரை விசுவாசித்து, அதை நம்பிக்கையோடு சொன்னால் போதுமானது. எந்தப் பிராயச்சித்தமும், பரிகாரமும் செய்யாமல் தியாகச் செயலைச் செய்த அவரை விசுவாசித்தால் போதுமானது. கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானது அல்ல, இது தேவனுடைய ஈவு. எபே 2:8,9.

எனவே தான் யூதர்களின் மத வைராக்கியத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட பவுல் சொல்லுகிறார், எத்தனையோ வழிகளில் மேன்மை பாராட்ட நிறைய மேன்மைகள் எனக்கு உண்டு. ஆனால் கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டமாட்டேன் கலா 6:14. என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். (பிலி 3:7,8) என்கிறார். கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்கு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். 1 கொரி 15:3,4 இதுதான் சிலுவையிலிருந்து வரும் நற்செய்தி. கர்த்தராகிய இயேசுவை உன் வாயினால் நீ அறிக்கையிட்டால் தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் நீ இரட்சிக்கப் படுவாய். ரோ 10:9,10.

யூதர்களின் மத வைராக்கியம், வல்லமை தரும் இந்த இரட்சிப்பை, சிலுவையின் உபதேஷத்தை ஏற்றுக்கொள்ளத் தடையா யிருந்தது. கிரேக்கர்களுடைய ஞானத்திற்கு முன் இது மடமையான, அற்பமான விசயமாயிருந்தது. நீங்கள் சிலுவையின் இந்த நற்செய்தியை ஏற்றுக்கொள்ள சிலுவைக்கு முன் வருவதற்கு எது தடையாயுள்ளது? உங்களுடைய மதக் கொள்கையா? குலப் பெருமையா? படிப்பா? பதவியா? அல்லது உங்களுடைய பாவமா? வெறுமையா? விரத்தியா? எதுவாயிருந்தாலும் உங்களுக்காக உயிர்கொடுத்த இயேசு யாரையும் புறம்போ தள்ளமாட்டார். நாம் செய்யும் புண்ணிய செயல்களோ, மத நம்பிக்கைகளோ எதுவுமே நம்மை பாவத்திலிருந்து விடுதலை கொடுக்க முடியாது. இயேசு மதத்தை தோற்றுவிக்க வரவில்லை. இயேசு மனிதர்களைக் காப்பாற்றும் இறைவன். மனிதனின் கஷ்டத்திலிருந்து அவனை மீட்க, மனிதனைப் போல பிறந்து சிலுவையிலே அவர் நமக்காக யாவையும் செய்து முடித்துள்ளார். அதை விசுவாசித்து இதைச் சொன்னாலே போதும். நீ கிறிஸ்துவுக்குள் விடுதலை பெறுவாய், அப்பொழுது அது உனக்கு தேவ வல்லமையாயிருக்கும்.

நான் மன்னிக்கப்படுவதற்காக நீர் தண்டிக்கப்பட்டீர். நன்றி இயேசப்பா. நான் சுகமாய் வாழ நீர் காயப்பட்டீரே நன்றி இயேசப்பா. நான் உங்க பிள்ளையாக ஏற்றுக்கொள்ளப்படும்படி நீர் புறக்கணிக்கப் பட்டீரே, நான் நீதிமானாய் மாற எனக்காக பாவமானீரே, நான் மகிமையில் பங்குபெற எனக்காக அவமானம் அடைந்தீரே நன்றி இயேசப்பா. நான் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள நீர் மரணத்தை ஏற்றுக்கொண்டீரே நான் செழிப்பாய் செல்வந்தனாய் வாழ எனக்காக தரித்திரர் ஆனீரே. நான் ஆசீர்வாதமாய் வாழ எனக்காக சாபமானீரே நன்றி இயேசப்பா. தொடர்ந்து உங்களை பின்பற்ற என்னைத் தருகிறேன். என்னை வழிநடத்துங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென். சிலுவையில் நமக்குப் பதிலாக மரித்து, அவர் தரும் சிலுவையின் நற்செய்தி நிச்சயமாய் உங்களுக்கு விடுதலை அளித்து, ஆசீர்வாதங்களும், நம்பிக்கையும், வல்லமையும் தந்து வழிநடத்தும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை. உயிர்தொழுந்த கிறிஸ்துதாமே சிலுவையின் நற்செய்தியால் உங்களை பெலனடையச் செய்வாராக.

# நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!

பத்மா அழகான பிள்ளை. ஆனால் மற்ற பிள்ளைகளைப் போல அவளால் பாடங்களைப் படிக்க முடியவில்லை, பேசவும் முடியவில்லை. ஏன்னா பத்மா மனவளர்ச்சி குன்றிய பிள்ளையாக இருந்தாள். போகாத கோயில் இல்லை, பார்க்காத வைத்தியம் இல்லை. பத்மா அப்பா கூலி வேலை செய்து, தன் மனைவி, பிள்ளையைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று பத்மாவின் அம்மா இறந்திட்டாங்க. பத்மாவுடைய அப்பா ரொம்பவே சோர்ந்துபோய், எப்படி என் பிள்ளையை வளர்க்கப் போறேன்னு இருந்த நேரத்துல, நண்பர் ஒருவர் அவருக்கு இயேசப்பா உனக்கு நிச்சயம் உதவி செய்வார், சர்ச்சுக்கு வா என்று சொல்லி ஆலயத்துக்கு அழைத்தார். தன் மகள் படிக்க எழுத திறனற்ற பிள்ளை, எந்தப் பள்ளியிலும், இந்த பிள்ளையை சேர்த்து படிக்க வைக்க தகுதியில்லாத பிள்ளை என்று டாக்டர் கொடுத்த சர்டிபிகேட்டை எடுத்துக் கொண்டு, தன் பிள்ளையையும் கூட்டிக் கொண்டு ஆலயத்திற்குச் சென்றார் பத்மாவின் அப்பா. இயேசப்பா மரித்த பின்னும் உயிரோடு எழுந்த தெய்வம் நீங்கதான், என் நிலைமையைப் பாருங்க, என் பிள்ளை நன்றாக பேச, படிக்க உதவி செய்யுங்க என்று வேண்டிக் கொண்டார்.

என்ன அதிசயம்! பத்மாவின் மனநிலையில் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் தெரிய ஆரம்பிச்சிருச்சு. பாடங்களைப் புரிந்து படிக்கவும், பரீட்சை எழுதவும் முடிந்தது. இன்றைக்கு ஒன்பதாம் வகுப்பு படிக்கும் பத்மா, கிறிஸ்தவ விடுதி ஒன்றில் தங்கிப் படித்து வருகிறாள். இயேசுவாலே எல்லாம் கூடும். மருத்துவர் இந்த பிள்ளை படிக்கவே முடியாதுன்னு சொன்னார். ஆனால் இயேசப்பா அந்த பிள்ளையை நல்லாப் படிக்க வச்சிட்டார். இயேசப்பா தான் உயிருள்ள தெய்வம், இயேசப்பா எங்களைக் கைவிடல, அவரை மறக்கவே மாட்டேன், அவரைத் தான் காலமெல்லாம் கும்பிடுவேன் என்று மனதார, வாயாரச் சொல்லிக் கொண்டிருந்தார் பத்மாவின் அப்பா. ஆம் மருத்துவரால் கூடாதது, தேவனால் கூடும். என்ன குட்டீஸ்! உங்க வீட்டில பத்மா மாதிரி யாராவது முடியாம இருக்காங்களா? ஏதாவது கஷ்டமா? கவலைப்படாதீங்க அம்மா, அப்பாவ துணைக்கு கூப்பிட்டுட்டு பக்கத்துல இருக்கிற சர்ச்சுக்கு போங்க, இயேசுவே எங்களுக்கு உதவி செய்யுங்க என்று நம்பிக்கையோடு கேளுங்க. பத்மாவுக்கு உதவி செய்த இயேசப்பா உங்களுக்கும் உதவி செய்வார்.

பைபிள்-ல கூட இயேசப்பாவின் சீஷர்களில் இரண்டு பேர் ஆலயத்துக்குப் போகும்போது, அங்கே வாசல்-ல அம்மா வயிற்றிலிருந்து பிறக்கும்போதே சப்பாணியாய் உடல் ஊனமாய் நடக்க முடியாத ஒருத்தர் அவர்களிடம் பிச்சை கேட்டார். அவங்க சொன்னாங்க என்னிடத்தில் ஒன்றும் இல்லை, என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எழுந்து நட என்று சொல்லி அவன் கையைப் பிடித்து தூக்கி விட்டார்கள். பிறந்ததிலிருந்தே நடக்காத அவன் நடந்தான், குதித்தான், ஓடினான் இயேசப்பா அவனைப் பெலப்படுத்தினார். என்ன அற்புதம்! அன்றைக்கு அவனுக்கு செய்த மாதிரி இயேசப்பா பத்மாவுக்கும் செய்துள்ளார். உனக்கும், உங்களுக்கும், நீங்க யாருக்கு இயேசப்பா பத்தி சொல்றீங்களோ அவங்களுக்கும் அதிசயம் செய்வார். Ok குட்டீஸ் சந்தோசமாயிருங்க, Bye.

### ஜெபம்

அன்புள்ள இயேசப்பா மனவளர்ச்சி குன்றி, குறைவாய் உள்ள மாற்றுத் திறனாளிகளாய் இருக்கிற பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறேன். அவங்களுக்கு அற்புதம் செய்யுங்க, அவங்க பெற்றோருக்கு உதவி செய்யுங்க. அவங்கள நான் பார்க்கும்போது ஸ்பெஷல் சைல்டா பார்க்கவும், அவங்களுக்காக ஜெபிக்கவும், என்னால ஆன உதவிகளைச் செய்ய எனக்குப் பெலன் தாங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

**மனப்பாட வசனம்** மனுஷரால் இது கூடாதது தான், தேவனாலே இது கூடாததல்ல, தேவனாலே எல்லாம் கூடும். மாற் 10:27



# மனவிருப்பங்களை நிறைவேற்றும் தேவன்



**சகோதரி. கோகிலா - அமெரிக்கா**

திருப்பத்தூரில் கடந்த ஆண்டு நடந்த பரிசுத்த உபவாச முகாமில் நான் கலந்து கொண்டேன். நான் வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்வதில் உள்ள தடைகள் நீங்க வேண்டும் என்று உபவாசித்து ஜெபித்தபோது முகாமில் காலையில் பாடல் ஆராதனை வேளையில் சகோதரி கலா வின்சென்ட்ராஜ் அவர்கள் மூலமாக தேவன் தீர்க்கதரிசனமாக என்னோடு பேசினார், வெளிநாடு செல்வதில் உள்ள தடைகள் நீங்கும், கர்த்தர் காரியங்களை வாய்க்கச் செய்கிறார் என்று சொன்னார்கள். சகோதரி மூலமாக தேவன் தாம் சொன்ன வார்த்தையை நிறைவேற்றினார். தற்போது நான் வெளிநாட்டில் வேலை செய்கிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**சகோதரி. ஆக்னஸ் - திண்டுக்கல்**

நான் கடந்த மாதம் செம்பட்டி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் வைத்து நடைபெற்ற உபவாச ஜெபத்திற்கு இருதய பெலவீனத்தோடும் மிகுந்த வேதனையோடும், கண்ணீரோடும் வந்தேன். அந்த உபவாச ஜெபத்தில் தேவன் என்னைத் தொட்டார். எனக்கு ஜீவனைத் தந்து தயவு பாராட்டினார். சகோதரர் மூலம் தேவன் என்னோடு பேசினார், அவர்கள் பாடிய இந்த பூமியிலே என்ற பாடல் மூலம் நான் ஆறுதல் அடைந்தேன், பெலனைப் பெற்றேன். சமாதானத்தோடும், மனநிறைவோடும் வீடு திரும்பினேன். தேவாதி தேவனுக்கே மகிமை.

**சகோதரி. ஜெனி**

என் வாழ்க்கையைக் குறித்த போராட்டத்திலும், மிகுந்த மன உளைச்சலிலும் மிகவும் கஷ்டப்பட்டேன். என்ன செய்வது என்று தெரியாத நிலையில், குடும்பத்தில் பிரிவு ஏற்படக்கூடிய சூழ்நிலையில் கண்ணீரோடும் வேதனையோடும் அழுது கொண்டிருந்தேன். அப்பொழுது நான் தங்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு என் குடும்ப சமாதானத்திற்காகவும், ஒற்றுமைக்காகவும் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவும் ஜெபிக்க கேட்டுக் கொண்டேன். தாங்கள் ஜெபித்து சில ஆலோசனைகள் சொன்னீர்கள். நானும் அதன்படி ஜெபித்தேன். என் கணவர் மீது இருந்த கசப்பு, வெறுப்பு, கோபம் மாறினது, அவரும் என்னை வீட்டிற்கு வரச் சொல்லிவிட்டார். தற்போது நாங்கள் சேர்ந்து வாழவும், பிள்ளைகளுக்கு திருமண ஏற்பாடுகள் செய்யவும் தேவன் கிருபை செய்தார். எங்கள் குடும்பத்தை உடைத்து, எங்களை பிரிக்க நினைத்த சாத்தானின் சூழ்ச்சியிலிருந்து தேவன் எங்களை தப்புவித்து, பாதுகாத்தார். தேவனுக்கு கோடான கோடி நன்றி. எங்கள் குடும்பத்திற்காக ஜெபித்த உங்களுக்கு மிக்க நன்றி.

**சகோதரர். பால்ராஜ் - கன்னியாகுமாரி**

என் மருமகனுக்கு வேலைபார்க்கும் இடத்தில் பதவி உயர்வு கிடைப்பதில் தடை இருந்து கொண்டிருந்தது. இதனால் அவர் மிகுந்த மனஉளைச்சலில் அவதிப்பட்டார். நான் தொலைபேசியில் தங்களிடம் என் மருமகனுக்கு பதவி உயர்வு கிடைக்கவும், அதற்காக அவர் எழுதும் பரீட்சையில் வெற்றி கிடைக்கவும் ஜெபிக்க கேட்டுக்கொண்டேன். தாங்கள் பாரத்தோடு ஜெபித்தீர்கள், தேவன் ஜெபத்தைக் கேட்டு ஜெயத்தை தந்தார். பரீட்சையில் வெற்றிபெறவும், பதவி உயர்வு கிடைக்கவும் தேவன் கிருபை செய்தார். அவருக்கே மகிமை உண்டாவதாக.



# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார் (1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

## 2) இணையதளம்(WEBSITE)

WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

## 3) காசோலை(CHEQUE)

JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

## 4) GOOGLE PAY : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

## 5) மணியார்டர்(E.M.O) : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

நடப்பு செய்திகள்

# முட்டையின் மஞ்சள் கரு சாப்பிடலாமா? கொழுப்பு என ஒதுக்குவது சரியா?

முட்டையின் மஞ்சள் கருவில் எண்ணற்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளது. முட்டையின் மஞ்சள் கருவில் ஆரோக்கியமற்ற கொழுப்பு இருப்பதாகக் கருதி பலர் அதை நிராகரிக்கின்றனர். பல மருத்துவர்கள் இது கட்டுக்கதை என்று கூறுகின்றனர். குறிப்பாக முட்டையின் மஞ்சள் கருவில் எண்ணற்ற ஊட்டச்சத்துக்கள் நிறைந்துள்ளதாக கூறும் மருத்துவர்கள், அதுகுறித்து விளக்கிய தகவலை இங்கு காண்போம்

**வைட்டமின் ஏ** : முட்டையின் மஞ்சள் கருவில் வைட்டமின் ஏ நிறைந்துள்ளது. இது கண்பார்வைக்கு நன்மை பயக்கும் ஊட்டச்சத்தாகும். முட்டையின் மஞ்சள் கருவை சாப்பிட்டு வந்தால் மாலைக்கண் நோய் மற்றும் வயது தொடர்பான மாகுலர் சிதைவிலிருந்து பாதுகாக்க உதவுகிறது.. வைட்டமின் ஏ போதுமான அளவு உட்கொள்வது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது.

**வைட்டமின் டி** : முட்டையின் மஞ்சள் கரு வைட்டமின்டி-ன் இயற்கையான மூலமாகும்.. போதுமான அளவு வைட்டமின் டி உட்கொள்வது எலும்பு அடர்த்தியை பராமரிக்கவும், ஆஸ்டியோபோரோசிஸ் மற்றும் எலும்பு முறிவு அபாயத்தைக் குறைக்கவும் உதவுகிறது.

**வைட்டமின் ஈ** : முட்டையின் மஞ்சள் கருவில் பல்வேறு வகையான வைட்டமின் ஈ உள்ளது, இதில் ஆல்பா-டோகோபெரோல் அடங்கும். இது இருதய ஆரோக்கியத்தை மேம்படுத்துவதோடு நாள்பட்ட நோய்களின் அபாயத்தைக் குறைக்கிறது வைட்டமின் ஈ சரும ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், புற ஊதா கதிர்வீச்சினால் ஏற்படும் சேதம் மற்றும் வயதான தோற்றத்தை தடுக்கவும் உதவுகிறது.

**வைட்டமின் கே** : முட்டையின் மஞ்சள் கருவில் பைலோகுவினோன் வடிவில் வைட்டமின் கே உள்ளது. இது இரத்தத்தின் சரியான உறைதலை உறுதி செய்கிறது. எலும்பின் அடர்த்தியை பராமரிக்கவும், எலும்பு முறிவு அபாயத்தைக் குறைக்கவும், தமனிகளின் கால்சிஃபிகேஷனைத் தடுக்கவும் போதுமான வைட்டமின் கே உட்கொள்ளல் அவசியம்.

**வைட்டமின் பி2** : முட்டையின் மஞ்சள் கருவில் ரைபோஃப்ளேவின் வளமான மூலமாகும். இது இரத்த சிவப்பணுக்களின் உற்பத்திக்கு உதவுகிறது. ஆரோக்கியமான தோல், கண்கள் மற்றும் நரம்பு மண்டலத்தை பராமரிப்பது உட்பட பல்வேறு வளர்சிதை மாற்ற செயல்முறைக்கும் வைட்டமின் பி2 அவசியம். மேலும் சோர்வு, பலவீனம் மற்றும் தோல் கோளாறுகளை சரிசெய்ய மஞ்சள் கருவில் உள்ள ரிபோஃப்ளேவின் போதுமான அளவு உட்கொள்வது அவசியம்.

**வைட்டமின் பி6** : முட்டையின் மஞ்சள் கருவில் வைட்டமின் பி6 உள்ளது. இது செரோடோனின், டோபமைன் மற்றும் காமா-அமினோபியூட்ரிக் அமிலம் (GABA) போன்ற நரம்பியக்கடத்திகளின் தொகுப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதனால் உங்கள் நினைவாற்றல் மேம்படும். மேலும் மனநிலையை ஒழுங்குபடுத்துவதற்கும், மனச்சோர்வு மற்றும் பதட்டம் போன்ற நிலைமைகளின் அபாயத்தைக் குறைப்பதற்கும் வைட்டமின் பி6 போதுமான அளவு உட்கொள்வது அவசியம்.

**வைட்டமின் பி12** : முட்டையின் மஞ்சள் கருவில் வைட்டமின் பி 12 இன் இயற்கையான மூலமாகும். இது நரம்பு ஆரோக்கியம் மற்றும் அறிவாற்றல் செயல்பாட்டை பராமரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இது சோர்வு, பலவீனம், கூச்ச உணர்வு மற்றும் அறிவாற்றல் குறைபாடு போன்ற பிரச்சனைகளை சரிசெய்ய உதவுகிறது.

**ஃபோலேட் (வைட்டமின் பி9)** : முட்டையின் மஞ்சள் கருவில் ஃபோலேட் உள்ளது, இது வைட்டமின் பி9இன் இயற்கையான வடிவமாகும், இது கர்ப்ப காலத்தில் கருவின் வளர்ச்சிக்கு உதவுகிறது மற்றும் நரம்பு குழாய் குறைபாடு அபாயத்தைக் குறைக்கிறது.

**பாந்தோத்தேனிக் அமிலம் (வைட்டமின் பி5)** : முட்டையின் மஞ்சள் கருவில் பாந்தோதெனிக் அமிலம் உள்ளது, இது கார்போஹைட்ரேட் மற்றும் கொழுப்புகளை ஆற்றலாக மாற்ற உதவுகிறது மற்றும் ஆரோக்கியமான தோல், முடி மற்றும் நகங்களை பராமரிக்க உதவுகிறது.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai

## வேலூர் மாவட்டம்

# குடியாத்தம் மேல் ஆலத்தூரில்

# விடுதலை பெருவிழா



ஏப்ரல்
27, 28
சனி, ஞாயிறு
மாலை
6.00 மணி

தேவ செய்தி மற்றும் ஜெபம்
சகோதரர். L. வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்
இயேசு வாழ்கிறார் ஊழியங்கள், மதுரை.

**இடம் : மேல் ஆலத்தூர் விளையாட்டு மைதானம்**
**மேல் ஆலத்தூர், குடியாத்தம்**

தொடர்புக்கு : 90038 42378 , 9626416912

---

# நம்பிக்கையின் இரவு

## NIGHT OF HOPE

LIVE – நேரலை நிகழ்ச்சி

## புதிய மாத ஆசீர்வாத வாக்குத்தத்த ஜெபம்



தேவ செய்தியாளர்கள்
சகோதரர். L. வின்சென்ட்ராஜ்
சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

**ஏப்ரல் 30**

செவ்வாய்கிழமை
இரவு 10.30 மணி முதல்
12.30 மணி வரை



உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய தொலைபேசி எண் - 94428 00449

நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2024-2026
WPP Registration No. TN/WPP-40/SR/2024-2026
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S

# SCHOOL OF EVANGELISM

## சுவிசேஷ பயிற்சி முகாம்
## நீங்கள் சுவிசேஷகராக விருப்பமா?



**வாருங்கள் நாம் இணைந்து சுத்த சுவிசேஷத்தைப் பரவச் செய்வோம்**

**சுவிசேஷ பயிற்சிப் பள்ளியின் நோக்கம் - தேசத்தின் இருளான நிலையை மாற்ற, சுவிசேஷத்தை எங்கும் அறிவிக்கிற தலைமுறையை எழுப்ப வேண்டும்.**

**சுவிசேஷ பயிற்சியைப் பற்றிய தகவல்கள்**

நீங்கள் மிகுந்த ஜெபத்துடன் முகாமில் கலந்து கொள்ள வேண்டும்
தலைசிறந்த சுவிசேஷகர்கள் மற்றும் போதகர்களால் பயிற்சி வழங்கப்படும்
தங்கும் இடம் மற்றும் மூன்று வேளை உணவும் வழங்கப்படும்
பெண்களுக்கு தனியாக தங்குமிடம் உண்டு

**இடம் : வானத்தின் வாசல், எழுப்புதல் ஜெப மையம், செம்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்**

**ஏப்ரல் 9-12**

**நீங்கள் பதிவு செய்ய வேண்டிய வழிமுறைகள்**

Phone - +91 9498000449 Website - soe.Jesuslives.in E-Mail - soe@jesuslives.in

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.